# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 14,486 — 1965 අගෝස්තු 20 වැනි සිකුරාදා — 1965.8.20

14,486 ம் இலக்கம்—1965 ம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV—உள்ளூர் ஆட்சி

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகச் சேர்வை செய்துவைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளது]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| உள்ளூராட்சி அறிவிப்புகள் .. .. | 95 | வரவு செலவுக் கூற்றுக்கள் .. .. | — |
| பதவிகள்—வெற்றிடம் .. .. .. | — | வரவு செலவுத் திட்டங்கள் .. .. | — |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும், பிறவும் .. | — | ஆதன விற்பனைகள் .. .. .. | — |
| துணை விதிகள் .. .. .. | 96 | விதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் .. .. | — |
| உள்ளூராட்சி அதிகார நிலையத் தேர்தற் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் .. .. .. | — | நாணயவிதம் .. .. .. | — |


## உள்ளூராட்சி அறிவிப்புகள்

### களியாட்ட வரிக்கட்டளைச் சட்டம்

(267 ஆம் அத்தியாயமான) களியாட்ட வரிக்கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் சுன்னாகம் பட்டினச் சபையால் நிறைவேற்றப்பட்ட கீழ்க்காணும் தீர்மானம், அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் நியதிப்படி உள்ளூராட்சி அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டு பிரசுரிக்கப் படுகின்றது.

#### தீர்மானம்

" இச்சபை, (267 ஆம் அத்தியாயமான) களியாட்ட வரிக்கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ், சபையின் நிருவாக எல்லைகளுக்குட்பட்ட பிரதேசத்தில் நடைபெறும் (கட்டளைச் சட்டத்தில் வரையறுக்கப்பட்டபடியான) களியாட்டங்களுக்கான பிரவேசக்கட்டணங் களின்மீது இதன் கீழ் குறித்துள்ள வீதங்களின்படியான ஒருவரியை, இத்தீர்மானம் கசெற்றில் பிரசுரமாகும் தேதி தொடக்கம், இத்தால் விதித்து அறவிடுகின்றது :—

| பிரவேசக்கட்டணம் | வரிவீதம் ரூ. ச. |
|---|---|
| வரித்தொகை நீங்கலான பிரவேசக்கட்டணம்— | |
| (அ) 20 சதத்துக்கு குறையாமலும் 50 சதத்துக்கு மேற்படாமலும் இருப்பின் .. .. | 0 05 |
| (ஆ) 50 சதத்துக்கு மேற்பட்டு ரூ. 1 க்கு மேற்படாதிருப்பின் .. .. .. | 0 10 |
| (இ) ரூ. 1 க்கு மேற்பட்டு ரூ. 1.50 க்கு மேற்படாதிருப்பின் | 0 15 |
| (ஈ) ரூ. 1.50 க்கு மேற்பட்டு ரூ. 2 க்கு மேற்படாதிருப்பின் | 0 20 |
| (உ) ரூ. 2 க்கு மேற்பட்டு ரூ. 3 க்கு மேற்படாதிருப்பின் .. | 0 30 |
| (ஊ) ரூ. 3 க்கு மேற்பட்டு ரூ. 4 க்கு மேற்படாதிருப்பின் .. | 0 40 |
| (எ) ரூ. 4 க்கு மேற்பட்டு ரூ. 5 க்கு மேற்படாதிருப்பின் .. | 0 50 |
| (ஏ) ரூ. 5 க்கு மேற்பட்டு ரூ. 10 க்கு மேற்படாதிருப்பின்.. | 1 0 |
| (ஐ) ரூ. 10 க்கு மேற்படின்— | |
| (1) முதலாவது ரூ. 10 க்கு .. .. | 1 0 |
| (2) கூடுதலான ஒவ்வொரு ரூ. 10 க்கும் அல்லது அதன் பகுதிக்கும் .. .. | 1 0 |

ஏ. ஈ. கொகர்லி மொரகொட,
நிரந்தரச் செயலாளர்,
உள்ளூராட்சி அமைச்சு.

கொழும்பு 1,
1965 ம் ஹு ஜூலை மீ 29 ந உ.

8–792—20.8.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,486

### முக்கிய விளம்பரம்

*1965 ம் ஆண்டு புரட்டாதி (செத்தெம்பர்) மாதம் 10 ந் திகதி வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறையாக இருப்பதால் 1965 ம் ஆண்டு புரட்டாதி (செத்தெம்பர்) மாதம் 9 ந் திகதி வெளிவரவிருக்கும் இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட வேண்டிய சகல விளம்பரங்களும் அறிவித்தல்களும் 1965 ம் ஆண்டு புரட்டாதி (செத்தெம்பர்) மாதம் 4 ந் திகதி சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்னர் அரசாங்க அச்சகத்திற்கு வந்துசேர வேண்டுமென இத்தால் தெரிவிக்கப்படுகின்றது.*

*பேர்ணுட் த சில்வா,*
*அரசாங்க அச்சகத் தலைவர்.*

*அரசாங்க அச்சகம்,*
*கொழும்பு,*
*1965 ம் ஹு ஆவணி (ஓகத்து) மீ 20 ந் உ.*

# துணைவிதிகள்

அல். பி.—சி. 56/50

## காங்கேசன்துறைப் பட்டின சபை

### பட்டின சபைக் கட்டளைச் சட்டம்

(256 ம் அத்தியாயமான) பட்டின சபைக் கட்டளைச் சட்டத்தின் 152 ம், 156 ம் பிரிவுகளின் கீழ், காங்கேசன்துறைப் பட்டின சபையால் ஆக்கப்பட்டு, உள்ளூராட்சி அமைச்சரால் அக்கட்டளைச் சட்டத்தின் 153 ம் பிரிவால் அவருக்கு அளிக்கப்பட்ட அதிகாரங்களின் பலத்தைக் கொண்டு அங்கீகரிக்கப்பட்ட துணை விதிகள்.

ஏ. ஈ. கொகர்லி மொரகொட,
நிரந்தரச் செயலாளர்,
உள்ளூராட்சி அமைச்சு.

கொழும்பு
1965 ம் ஆண்டு ஜூலை மீ 29 ந.

#### துணைவிதிகள்

1951 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 27 ந் தேதிய 10,240 ம் இலக்க கசெற்றிற் பிரசுரிக்கப்பட்டுப்பின் 1956 ஜனவரி 27 ம் தேதிய 10,885 இலக்கக் கசெற்றிற் பிரசுரிக்கப்பட்ட துணைவிதியின் மூலம் திருத்தப்பட்டபடியுள்ள உத்தரவுச் சீட்டுகள் பற்றிய பொதுத்துணைவிதிகள் அவற்றின் 1 ம் துணைவிதியில் "அருவருப்பானவையும் அபாயகரமானவையுமான தொழில்கள்" என்பதன் வரைவிலக்கணத்தில் "நெற்குத்தும் ஆலைவைத் திருத்தல்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "நெற்குத்தும் ஆலைவைத் திருத்தல், அலுமினியப் பாத்திரங்கள் செய்தல், அலுமினியத் தகடுகளைச் சேகரித்து வைத்தல், சீமெந்து உற்பத்தி செய்தல் அல்லது அதனைச் சேகரித்து வைத்தல்" என்னுஞ் சொற்களையிடுவதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றன.

8-776—20.8.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,486

---

## பெல்மதுல்ல பட்டினச் சபை

### பட்டின சபைகள் கட்டளைச் சட்டம்

(256 ஆம் அத்தியாயமான) பட்டின சபைகள் கட்டளைச் சட்டத்தின் 152, 156 ஆகிய பிரிவுகளின் கீழ் பெல்மதுல்ல பட்டின சபையால் ஆக்கப்பட்டு, அக்கட்டளைச் சட்டத்தின் 153 ஆம் பிரிவால் உள்ளூராட்சி அமைச்சருக்கு உரித்தாக்கப்பட்ட அதிகார பலத்தைக் கொண்டு அவரால் அங்கீகரிக்கப்பட்ட துணை விதிகள்.

ஏ. ஈ. கொகர்லி மொரகொட,
நிரந்தரச் செயலாளர்,
உள்ளூராட்சி அமைச்சு.

கொழும்பு 1,
1965 ம் ஆண்டு ஜூலை மீ 21 ந உ.

#### துணை விதிகள்

1. இத்துணை விதிகள், பெல்மதுல்ல பட்டின சபை விளம்பரத் துணை விதிகள், 1964 என வழங்கப்படலாம்.

2. இத்துணை விதிகள் நடைமுறைக்கு வருந்திகதிக்கு முன்னர் எந்த விளம்பரத்தையேனும் வெளிக்காட்டுவது ஆரம்பமாகியிருப்பின், அவ் விளம்பரத்துக்கு இத்துணை விதிகள் அத்திகதியிலிருந்து ஒரு வருட காலத்துக்கு பொருந்தா.

3. அதன் பொருட்டு அக்கிராசனரால், வழங்கப்படும் ஒரு அனுமதிச் சீட்டின் அதிகாரத்தின் கீழன்றி, வீதி, தெரு, கால்வாய் அல்லது வாவி எதிலுமிருந்து காணக்கூடியதாக விளம்பரம் எதையும் எவரும் வெளிக்காட்டுவிக்கக்கூடாது.

ஆயினும், இத்துணை விதியின் முந்திய ஏற்பாடுகள் கீழ்க் காணும் விளம்பரங்களுக்கு, அத்தகைய விளம்பரம் தீபாலங்காரம் செய்யப்பட்ட ஒரு விளம்பரமாக அல்லது ஒருவான் அடையாளமாக இருந்தாலன்றி, பொருந்தா—

(அ) கிடைக்கும் வரும்படி முழுவதும் ஒரு தருமநோக்கத்துக்கு உபயோகிக்கப்பட விருப்பதான களியாட்டம் எதையும் பற்றிய ஒரு விளம்பரம் ;

(ஆ) அந்த விளம்பரம் எந்த வளவில் வெளிக்காட்டப்படுகின்றதோ அங்கு நடைபெறவிருக்கும் களியாட்டம் எதையும் பற்றிய ஒரு விளம்பரம் ;

(இ) அரசாங்கத்தால் வெளிக்காட்டப்படும் ஒரு விளம்பரம் ;

(ஈ) ஒரு சமய, அரசியல் அல்லது பொதுக் கூட்டம் பற்றிய ஒரு விளம்பரம் ;

(உ) எக்கட்டத்தினதும் சன்னலிலுள்ள ஒரு விளம்பரம் ;

(ஊ) ஒரு "வாடகைக்கு" விளம்பரம் ;

(எ) ஒரு "விற்பனைக்கு" விளம்பரம் ;

(ஏ) ஒரு வீட்டுக்குரிய பெயர்த்தகடு ;

(ஐ) தொழில் நோக்கங்களுக்கு உபயோகிக்கப்படும், ஒரு சதுர அடிப் பரப்புக்கு மேற்படாத, ஒரு பெயர்த்தகடு.

(ஒ) வியாபார நோக்கங்களுக்கு உபயோகிக்கப்படும் ஒரு வாகனத்தில், அந்த வாகனத்தின் உடைமையாளரின் பெயரையும் முகவரியையும் வெளிக்காட்டிவைக்கப்படும் ஒரு விளம்பரம்.

(ஓ) அந்த விளம்பரம் எந்த வளவில் வெளிக்காட்டப்படுகின்றதோ அந்த வளவில் நடைபெறும் வியாபாரம் அல்லது தொழில் பற்றிய ஒரு விளம்பரம்.

4. (1) எந்த விளம்பரத்தையும் வெளிக்காட்டுதற் பொருட்டான ஒரு அனுமதிச்சீட்டுக்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும், அந்த விளம்பரம் வெளிக்காட்டப்படுவதைத் தொடங்குதற்கு எண்ணியிருக்கும் திகதியிலிருந்து எழுதினங்களுக்காவது முன்னர் சபையால் நல்கப்படும் பத்திரத்தில், தலைவருக்கு அனுப்பப்பட வேண்டும். ஆயின், தலைவர் விசேட சூழ்நிலைகளில், இப்பந்தியின் முந்திய ஏற்பாடுகளில் குறித்துள்ள கால எல்லைக்குள் செய்யப்படாத இவ்வித விண்ணப்பம் எதையும் ஏற்றுக் கொள்ளலாம்.

(2) பந்தி (1) ல் சொல்லப்படும் விண்ணப்பம் ஒவ்வொன்றுடனும் விண்ணப்பகாரர் வெளிக்காட்ட எண்ணும் விளம்பரத்தின் ஒரு பிரதியும் அவ்விளம்பரம் வெளிக்காட்டப்படவிருக்கும் இடத்தைக் காட்டும் ஒரு தரைப்படமும் அனுப்பப்படவேண்டும்.

(3) பந்தி (1) இல் சொல்லப்படும் விண்ணப்பம் ஒன்றைத் தலைவர் அங்கீகரிப்பாரேல், அவர் அந்த விளம்பரத்தை வெளிக்காட்டுவதற்கான அனுமதிச்சீட்டின் பொருட்டு இதற்குள்ள அட்டவணையில் குறித்துள்ள வீதப்படி கணிக்கப்படும் ஒரு கட்டணத்தை செலுத்துமாறு அவர் அவ் விண்ணப்பதாரரைப் பணித்தல் வேண்டும். அக்கட்டணம் செலுத்தப்படும் வரை அவ்வனுமதிச்சீட்டு வழங்கப்படலாகாது.

5. (1) ஒரு விளம்பரத்தை வெளிக்காட்டுதற்கான ஒரு அனுமதிச் சீட்டு எவருக்கேனும் வழங்கப்படின், —

(அ) அந்த அனுமதிச்சீட்டின் இலக்கத்தையும் திகதியையும் விளம்பரப் பிரதி ஒவ்வொன்றிலும் இடுமாறு, அல்லது

(ஆ) அந்த அனுமதிச்சீட்டுக்குக் கட்டணம் செலுத்தப்பட்டமைக்கு அடையாளமாக முத்திரை பொறித்தற் பொருட்டு அவ்விளம்பரத்தின் ஒவ்வொரு பிரதியையும் தலைவர் முன்பு கொண்டுவருமாறு தலைவர் பணித்தல் வேண்டும்.

(2) இத்துணை விதியில பந்தி (1) இன் கீழ் தலைவரால் ஒரு பணிப்புரை வழங்கப்பட்ட ஒவ்வொருவரும் அப்பணிப்புரைகளின்படி செயலாற்ற வேண்டும்.

6. எவரேனும்,

(அ) ஒரு விளம்பரத்தை, அவ்விளம்பரம் சபையின் வேலை அத்தியட்சரால் அங்கீகரிக்கப்பட்ட முறையில் கட்டி எழுப்பப்பட்ட ஒரு முன்னீண்ட விளம்பரமாயிருந்தாலன்றி, கட்டட ரேகையிலிருந்து கிடைநிலையில் அளக்கும்போது வீதி அல்லது தெரு எதன் மீதும் ஆறு அங்குலத்துக்கதிகமான தூரத்துக்கு நீட்டிக் கொண்டிருக்கக் கூடிய முறையில் வெளிக்காட்டுவிக்கவோ ;

(ஆ) ஒரு விளம்பரத்தை, அவ்விளம்பரம் தெருவின் மத்தியிலிருந்து இருபத்தைந்தடிக்குக் குறையாத தூரத்திலிருந்தாலன்றி கட்டட ரேகை ஒன்று இல்லாத எந்த இடத்திலும் வெளிக்காட்டுவிக்கவோ ;

(இ) நிலத்திலிருந்து இருபத்தைந்தடிக்கு அதிகமான உயரமுள்ள அல்லது வீதி அல்லது தெரு எதன் மீதும் நீட்டிக் கொண்டிருக்கும் விளம்பரப் பலகை மீது விளம்பரமொன்றை வெளிக்காட்டுவிக்கவோ ;

(ஈ) ஒரு வீதியில் அல்லது தெருவில் மருவிக்கொண்டிருக்கும் ஒரு கட்டிட முகப்பில் அத்தகைய முகப்பின் எல்லைகளுக்கப்பால் நீளும், அல்லது எந்த இடத்திலேனும் நடைபாதையிலிருந்து அல்லது நிலத்தின் சராசரி மட்டத்திலிருந்து அவ்வடையாளத்தின் அடி எவ்வளவு தூரத்திலிருக்கின்றதோ அதில் நாலில் ஒன்றுக்கு அதிகமான உயரம் உள்ள கடை அடையாளம் எதையும், மாட்டுவிக்கவோ அல்லது தொங்கவிடுவிக்கவோ, அல்லது

(உ) சபையின் வேலை அத்தியட்சரால் அங்கீகரிக்கப்படாத முறையில் வான் அடையாளம் எதையும் கட்டி எழுப்புவிக்கவோ கூடாது.

7. பொது வழிபாட்டிடம், பொதுப் பூங்கா அல்லது மல கூடம் எதிலேனும் அல்லது பாலம், தெரு விளக்குக் கம்பம் அல்லது தந்தி அல்லது தொலைபேசிக் கம்பம் எதிலுமேனும் விளம்பரம் எதையும் எவரும் வெளிக்காட்டக்கூடாது.

8. (1) விளம்பரம் எதுவும், தலைவரின் அபிப்பிராயப்படி, விகார மான அல்லல் ஆட்சேபிக்கத்தக்க நிலைமையிலிருக்குமாயின் அவர் எழுத்து மூலமான அறிவித்தல்வாயிலாக அந்த அறிவித்தலில் குறிக்கப் படும் காலத்துக்குள் அந்த விளம்பரத்தை வெளிக் காட்டுவதை நிறுத்தும் படி அவ்விதம் வெளிக்காட்டுவிப்பவருக்கு கட்டளையிடலாம்.

(2) தலைவரால் (1) ஆம் பந்தியின் கீழ் ஒரு அறிவித்தல் வழங்கப் படும் ஒருவர் அவ்வறிவித்தலில் குறித்துள்ள காலத்துக்குள் அவ்வறி வித்தலுக்கு அமைதல் வேண்டும்.

9. விளம்பரங்களை வெளிக்காட்டுதற்கு உபயோகிக்கப்படும் விளம்பரப் பலகை எதனதும் உடைமையாளர் அல்லது குத்தகைக்காரர்—

(1) அந்த விளம்பரப் பலகையை பழுதற்றதும், பாதுகாப்பானதுமான நிலையில் பேணவும்

(2) அந்த விளம்பரப்பலகையின் முன்புறத்தில் ஒரு துலக்கமான இடத்தில் அவரது பெயரையும் முகவரியையும் தெளிவானதும் விளக்கமானதுமான எழுத்துகளில் காட்டவும் வேண்டும்.

10. எந்த விளம்பரத்திலும், அந்த விளம்பரத்தை வெளிக்காட்டுதற் கான அனுமதிச்சீட்டுக்கட்டணம் செலுத்தப்பட்டமைக்கு அடையாளமாகத் தலைவரால் போடப்பட்டுள்ள அடையாளம், குறி, எழுத்து, வார்த்தை அல்லது எண் எதையும் எவரும் உருவழிக்கவோ உரிவழிப்பிக்கவோ கூடாது.

11. எவரேனும், —

(அ) எவ்விளம்பரத்தையும் தலைவரால் அங்கீகரிக்கப்பட்ட முறையில் அல்லது மாதிரியில் அன்றி ஒரு வாகனத்தில் வெளிக்காட்டுவிக்க லாகாது,

(ஆ) பொலிசு அத்தியட்சரால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு வெளிச்ச விளம்பர மல்லாத வெளிச்ச விளம்பரமெதையும் தாங்கிய வாகனம் எதையும் வீதி அல்லது தெரு எதிலும் ஓட்டுவிக்கக்கூடாது.

12. இந்த துணை விதிகளின் ஏற்பாடுகளில் எதையும் மீறி நடக்கும் எவரும், ஒரு குற்றம் புரிந்தவராகி குற்றத்தீர்ப்பளிக்கப்படும்போது ஐம்பது ரூபாய்க்கு மேற்படாத தெண்டத்துககும், மீறுகை நீடிகக்கும் பட்சத்தில், குற்றத் தீர்ப்புக்குப் பின் அல்லது அந்த நீடிக்கும் மீறுகையைக் கவனத் துக்குக் கொண்டு வந்து தலைவரால எழுத்து மூலமான ஒரு அறிவித்தல் வழங்கப்பட்டபின் மீறுகை நீடிக்கும் ஒவ்வொரு தினத்துக்கும் இருபத் தைந்து ரூபாய்க்கு மேற்படாத தெண்டத்துககும் பாத்திரப்படுவார்.

13. இத்துணை விதிகளின், சந்தர்ப்பம் வேறு விதம் வேண்டினாலன்றி "விளம்பரம்" என்பது காணி, கட்டடம் அல்லது அமைப்பு எதற்கும் மேலே யுள்ள அல்லது எதன் மீதும் தங்கியுள்ள விளம்பர நோக்கமாக முற்றாக உபயோகிக்கப்படும் அல்லது விளம்பரப் பாங்குள்ள வார்த்தை எழுத்து, எண், அடயாளம் சுவரொட்டி, பலகை, அறிவித்தல், உபாயம், மாதிரி, அல்லது பிரதிமை எதையும் உட்படுத்துகின்றது.

"தலைவர்" என்பது சபைத் தலைவரைக் கருதுகின்றது.

"சபை" என்பது பெல்மதுல்ல பட்டின சபையைக் கருதுகின்றது.

"விளம்பரப்பலகை" என்பது விளம்பரம் எதையும் வெளிக்காட்டும் பொருட்டு நிறுத்தப்பட்டுள்ள அல்லது உபயோகிக்கப்படும் அமைப்பு ஆதாரம், கம்பம், பலகை, சுவர், பெட்டி எதையும் அல்லது வேறு யுத்தி எதையும் கருதுகின்றது.

"வான் அடையாளம்" என்பது வீதி, தெரு, கால்வாய் அல்லது ஏரி எதிலுமுள்ள ஏதாவதொரு இடத்திலிருந்து ஓயாயதை பின்ன ணியாகக் கொண்டு முற்றாகவோ பாகமாகவோ பார்க்கக்கூடிய காணி, கட்டடம் அல்லது வேறு அமைப்பு அதற்கும் மேலாக வேனும் எதன் மீதேனும் உள்ள கம்பம், தூண், நிலை மானம், சட்ட அமைப்பு அல்லது வேறு ஆதாரம் எதிலும் தாங் கப்பட்டதும் அல்லது எதிலும் இணைக்கப்பட்டதும் விளம்பரம் நோக்கத்துக்கு உபயோகிக்கப்பட்டும் வார்த்தை, எழுத்து, மாதிரி, அடையாளம், உபாயம் அல்லது பிரதிமை எதையும் கருதுவ தோடு காணி, கட்டடம், அமைப்பு, வீதி, அல்லது ஒரு எதிலும் அல்லது எதன் மேலேயும் விளம்பர நோக்கமாக முற்றாகவேனும் பகுதியாகவேனும் உபயோகிக்கப்பட்ட வாயுக்கூண்டு பரக்குடை இழுவண்டு அல்லது இதனையொத்த வேறு உபாயம் எதையும் உட்படுத்துகின்றது.

## அட்டவணை

### அனுமதிச்சீட்டுகளின் கட்டண விகிதங்கள்

| விளம்பரத்தின் விவரணம் | அனுமதிச்சீட்டுக் கட்டணம் — ஒரு மாதத்துக்கு அல்லது அதன் பகுதிக்கு ரூ. ச. | ஒரு வருடத் துக்கு ரூ. ச. |
|---|---|---|
| 1. ஒரு சுவரில் அல்லது விளம்பரப் பலகையில் வெளிக்காட்டப்படும் (ஒரு இயக்கப்படக் களியாட்டம் சம்பந்தமான விளம்பரமல்லாத) ஒரு விளம்பரத்துக்கு ஒவ்வொரு சதுர அடிக்கும் .. | .10 .. | 1.00 |
| எவராலேனும் சுமந்துசெல்லப்படும் அல்லது ஒரு நகரும் வாகனத்தில் இணைக்கப்பட்டிருக்கும் ஒரு பலகையால் அல்லது ஆதாரத்தில் வெளிககாட்டப் படும் (ஒரு இயக்கப்படக் களியாட்டம் சம் பந்தமான விளம்பரமல்லாத) ஒரு விளம்பரத்துக்கு — | | |
| (அ) அந்த விம்பரம் ஆறு சதுர அடிக்கு மேற்படாவிட்டால் ஒவ் வொரு சதுர அடிக்கும் .. | .25 .. | 2.50 |
| (ஆ) அந்த விளம்பரம் ஆறு சதுர அடிக்குமேற்பட்டால் ஒவ்வொரு சதுர அடிக்கும் .. | .50 .. | 5.00 |
| 2. இயக்கப்படக் களியாட்டம் சம்பந்த மான ஒரு விளம்பரத்துக்கு, ஒவ்வொரு சதுர அடிக்கும் .. .. | .10 .. | 1.00 |

8-781—20.8.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,486

வெள்ளிக்கிழமை தோறும் இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடை யிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

வெளியாவதற்கு நான்கு வேலை நாட்களுக்கு முன் பி. ப. 3.30 மணிக்குள் (சாதாரணமாக திங்கட்கிழமை பி. ப. 3.30 மணி) அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித்தல்களும், விளம்பரங்களும் வந்துசேரவேண்டும்.

அரசாங்க வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், தபால் பெட்டி இல. 500, கருமாலயம், கொழும்பு, அவர்கட்கு நேரடியாக சேர்ப்பிக்கப்படவேண்டும். அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் எதுவும் ஏற்றுக் கொள்ளமாட்டார்.

இலங்கை வாழைச்சேனை ஈஸ்ரேண் பேப்பர் மில்ஸ் கோப்பரேஷனால் உற்பத்தி செய்யப்பட்ட காகிதத்தில் இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.